**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

- - - - -

# IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC No. 151 / 2019** |
| **Deposition of witness for** | **:** | **PW : 1** |
| **Name** | **:** | **திருமதி. தமிழ்செல்வி** |
| **Father's Husband's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.02.2026**

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், முடுவார்பட்டியில் எனது கணவர் மற்றும் குடும்பத்தோடு குடியிருந்து வருகிறேன். எனது கணவர் மிலிடரியில் வேலை செய்து ஓய்வு பெற்றுவிட்டார். எனக்கு 2 பையன், 2 பொண்ணும் இருந்தனர். எனது மூத்த மகள் லெட்சுமியை என் உடன்பிறந்த தம்பி மணிகண்டனுக்குத் திருமணம் செய்து கொடுத்துவிட்டேன். எனது 2வது மகள் கலைச்செல்வியை கோபி என்பவருக்கு 2006ம் வருஷம் செப்டம்பர் 10ம் தேதி மேட்டுரில் வைத்து திருமணம் செய்து வைத்தோம். ஆஜர் 1வது எதிரி என் 2வது மகளின் மாமியார் மற்றும் 2வது எதிரி என் 2வது மகளின் கணவரின் உடன் பிறந்த தங்கை ஆவார். எனது மருமகன் கோபி போலிசில் வேலை செய்து வந்தார். என் 2வது மகளுக்கு 45 பவுன் நகையும்,

மாப்பிள்ளைக்கு 6 பவுன் நகையும், ரொக்கம் 1,35,000/- மற்றும் 2லட்சம் பெறுமானம் உள்ள சீர்வரிசை பொருட்கள் கொடுத்தோம். எனது மருமகனுக்கு TVS Victor வாகனம் வாங்கி கொடுத்தோம். திருமணத்திற்குப் பிறகு அவர்களுக்குள், சிறு சிறு சண்டைகள் ஏற்பட்டு வந்தது. என் மகளுக்கு திருமணத்திற்கு முன்பிருந்தே, அடிக்கடி வயிற்றுவலி பிரச்சனை இருந்து வந்தது. நாங்களும் மருத்துவம் செய்து வந்தோம். திருமணத்திற்குப் பின்னரும் என மகளுக்கு அந்த வயிற்று வலி இருந்ததால், எங்களிடம் வருவாள். நாங்கள் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வோம். என் 2வது மகள் கலைச்செல்வி வயிற்றுவலி தாங்கமாட்டாமல் 29.03.2007ம்தேதி மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துக் கொண்டது. காப்பாற்றப் போன எனது மருமகன் மீதும் தீ பிடித்துவிட்டது. நான் மருத்துவமனை சென்று பார்க்கப் போனேன். அன்றைய தினமே என் மகள் இறந்து விட்டாள். சுமார் 15 நாட்கள் கழித்து என் மருமகனும் இறந்துவிட்டார். 29.03.2007ம் தேதி மாலை 06.00 மணியளவில் என் மகள் தீக்காயம் பட்டு இறந்துவிட்டதாக போலிசாரிடம் சொன்னேன். அவர்கள் எழுதிக் கொடுத்த காகிதத்தில் கையொப்பம் செய்தேன். நான் பதடட்டத்தில் இருந்ததால் அதில் என்ன எழுதியிருந்தது என்று நானும் படித்துப் பார்க்கவில்லை, அவர்களிடமும் படித்துக் காண்பிக்கச் சொல்லவில்லை. **புகார் மனுவில் உள்ள எனது கையொப்பம் மட்டும் அதசாஆ.1 ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

போலிசார் விசாரணையின் போது, என் 2வது மகள் கலைச்செல்வியும்,

2வது எதிரியும் ஒரு நாள் பேசிக் கொண்டிருந்த போது, சின்னபொண்ணுபிள்ளை ஒரு கடிதத்தை உமாதேவியிடம் கொடுத்துச் சென்றதாகவும், அந்த கடிதத்தைப் பார்த்து உமாதேவி யாரோ ஒரு பெயர் தெரியாத நபரிடம் பழக்கம் உள்ளதை அறிந்து என் மகள் கண்டித்ததாகவும், அதனால் 1,2 எதிரிகள் என் மகள் மீது பொறாமை கொண்டு தகராறு செய்து, அடித்து துன்புறுத்தியதாகவும் என் மருமகனும் எதிரிகளுக்கு சப்போர்ட்டாக இருந்து இந்த விஷயத்தை வெளியே சொல்லி விடுவாளோ என்று நினைத்து 3 மாத கர்ப்பமாக இருந்த என் மகளை வயிற்றில் உதைத்து அடித்து, துன்புறுத்தியதாக சொல்லி என் மகள் எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டாள் என்றும் அதனால் என் மகளுக்கு கர்ப்பம் கலைந்துவிட்டதாகவும், சிகிச்சையில் இருந்த என் மகளை அவரது கணவர் மேட்டுரூக்கு அழைத்துச் சென்றதாகவும், அங்கும் என் மகளுக்கு உடல்நிலை சரியில்லாததால் எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்தோம் என்றும் ஒரு மாதம் எங்கள் வீட்டில் இருந்ததாகவும், அதன் பின்னர், என் மருமகன், என் மகளை போலிஸ் குவாட்டர்ஸ்க்கு அழைத்துச் சென்றதாகவும் நானும் என் கணவரும் என் மகளைப் பார்க்கச் சென்ற போது, என் மருமகன் அடிக்கடி குடித்துவிட்டு வந்து வீடு கட்ட வாங்கிய கடனுக்கு நகை போதாது என்றும் மேலும் 2லட்சம் பணம் வாங்கி வரச் சொல்லி அடித்து சித்ரவதை செய்வதாக என் மகள் கூறியதாகவும், நாங்கள் எங்கள் மருமகனிடம் ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்ட போது, எங்களை தகாத முறையில் பேசி, மேலும் 2லட்சம் கொடுங்கள் அல்லது நான் 2லட்சம் உங்களிடம் தருகிறேன் உங்களை மகளை டைவர்ஸ் செய்து கூட்டிச் செல்லுங்கள் என்று சொன்னதாகவும், அவர்களது கடனை அடைப்பதற்காகத்தான் என் மகளைக் கட்டிக்கிட்டதாகச் சொன்னார்கள் என்றும் 29.03.2007ம் தேதி மாலை 04.15 மணியளவில், நான்

என் வீட்டில் இருந்த போது, ஒரு நபர், உங்க மகளுக்கும், மருமகனுக்கும் accident ஆகிவிட்டது என்று சொன்னதைக் கேட்டு, நானும் என் கணவரும் என் மகள் வீட்டிற்குப் போனபோது, வீடு முழுவதும் தீப் பிடித்த கோலமாக இருந்தது என்றும் என் மகளை மருத்துவமனையில் வைத்து பார்த்ததாகவும், என் மகளை, என் மருமகன் தான் தீ வைத்து கொழுத்திவிட்டதாகவும், 1,2 எதிரிகள் வரதட்சனை கொடுமை செய்ததோடு, கொன்றும்விட்டார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகளுடன் சமாதானமாகப் போய்விட்டேன் என்றும் அதனால் எதிரிகளைக் குற்ற வழக்கில் இருந்து காப்பாற்றவேண்டும் என்பதற்காக உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**

நான் ஏற்கனவே நீதித்துறை நடுவரிடம் எனது உறவினர்கள் சொல்லிக் கொடுத்தவாறு சாட்சியம் அளித்துவிட்டேன் என்றால் சரிதான். அந்த சாட்சியம் நான் என் மகளைப் பறிகொடுத்த கோவத்திலும் பதட்டத்திலும் அன்று சாட்சியம் அளித்துவிட்டேன் என்றால் சரிதான். தற்போது முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் தான் உண்மை என்றால் சரிதான். 1,2 எதிரிகளின் தூண்டுதல் என் மகளின் தற்கொலைக்கு காரணம் இல்லை என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.02.12 12:33:18 +0530

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC No. 151 / 2019** |
| **Deposition of witness for** | **:** | **PW : 2** |
| **Name** | **:** | **திரு.சின்னகருப்பன்** |
| **Father's Husband's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.02.2026**

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், முடுவார்பட்டியில் எனது மனைவி மற்றும் குடும்பத்தோடு குடியிருந்து வருகிறேன். நான் மிலிடரியில் வேலை செய்து ஓய்வு பெற்றுவிட்டேன். அசா1 எனது மனைவி. எங்களுக்கு 2 பையன், 2 பொண்ணும் இருந்தனர். எனது மூத்த மகள் லெட்சுமியை என் மனைவியின் உடன்பிறந்த தம்பி மணிகண்டனுக்குத் திருமணம் செய்து கொடுத்துவிட்டோம். எனது 2வது மகள் கலைச்செல்வியை கோபி என்பவருக்கு 2006ம் வருஷம் செப்டம்பர் 10ம் தேதி மேட்டுரில் வைத்து திருமணம் செய்து வைத்தோம். ஆஜர் 1வது எதிரி என் 2வது மகளின் மாமியார் மற்றும் 2வது எதிரி என் 2வது மகளின் கணவரின் உடன் பிறந்த தங்கை ஆவார். எனது மருமகன் கோபி போலிசில் வேலை செய்து வந்தார்.

என் 2வது மகளுக்கு 45 பவுன் நகையும், மாப்பிள்ளைக்கு 6 பவுன் நகையும், ரொக்கம் 1,35,000/- மற்றும் 2லட்சம் பெறுமானம் உள்ள சீர்வரிசை பொருட்கள் கொடுத்தோம். எனது மருமகனுக்கு TVS Victor வாகனம் வாங்கி கொடுத்தோம். திருமணத்திற்குப் பிறகு அவர்களுக்குள், சிறு சிறு சண்டைகள் ஏற்பட்டு வந்தது. என் மகளுக்கு திருமணத்திற்கு முன்பிருந்தே, அடிக்கடி வயிற்றுவலி பிரச்சனை இருந்து வந்தது. நாங்களும் மருத்துவம் செய்து வந்தோம். திருமணத்திற்குப் பின்னரும் என் மகளுக்கு அந்த வயிற்று வலி இருந்ததால், எங்களிடம் வருவாள். நாங்கள் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வோம். என் 2வது மகள் கலைச்செல்வி வயிற்றுவலி தாங்கமாட்டாமல் 29.03.2007ம்தேதி மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துக் கொண்டது. காப்பாற்றப் போன எனது மருமகன் மீதும் தீ பிடித்துவிட்டது. நாங்கள் மருத்துவமனை சென்று பார்க்கப் போனோம். அன்றைய தினமே என் மகள் இறந்து விட்டாள். சுமார் 15 நாட்கள் கழித்து என் மருமகனும் இறந்துவிட்டார். 29.03.2007ம் தேதி மாலை 06.00 மணியளவில் என் மகள் தீக்காயம் பட்டு இறந்துவிட்டதாக என் மனைவி போலிசாரிடம் சொன்னார். அவர்கள் எழுதிக் கொடுத்த காகிதத்தில் கையொப்பம் செய்தார். நாங்கள் பதடட்டத்தில் இருந்ததால் அதில் என்ன எழுதியிருந்தது என்று படித்துப் பார்க்கவில்லை, அவர்களிடமும் படித்துக் காண்பிக்கச் சொல்லவில்லை. புகார் மனுவில் உள்ள எனது மனைவியின் கையொப்பம் மட்டும் அதசாஆ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

போலிசார் விசாரணையின் போது, என் 2வது மகள் கலைச்செல்வியும், 2வது எதிரியும் ஒரு நாள் பேசிக் கொண்டிருந்த போது, சின்னபொண்ணுபிள்ளை ஒரு கடிதத்தை உமாதேவியிடம் கொடுத்துச் சென்றதாகவும், அந்த கடிதத்தைப் பார்த்து உமாதேவி யாரோ ஒரு பெயர் தெரியாத நபரிடம் பழக்கம் உள்ளதை அறிந்து என் மகள் கண்டித்ததாகவும், அதனால் 1,2 எதிரிகள் என் மகள் மீது பொறாமை கொண்டு தகராறு செய்து, அடித்து துன்புறுத்தியதாகவும் என் மருமகனும் எதிரிகளுக்கு சப்போர்ட்டாக இருந்து இந்த விஷயத்தை வெளியே சொல்லி விடுவாளோ என்று நினைத்து 3 மாத கர்ப்பமாக இருந்த என் மகளை வயிற்றில் உதைத்து அடித்து, துன்புறுத்தியதாக சொல்லி என் மகள் எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டாள் என்றும் அதனால் என் மகளுக்கு கர்ப்பம் கலைந்துவிட்டதாகவும், சிகிச்சையில் இருந்த என் மகளை அவரது கணவர் மேட்டுரூக்கு அழைத்துச் சென்றதாகவும், அங்கும் என் மகளுக்கு உடல்நிலை சரியில்லாததால் எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்தோம் என்றும் ஒரு மாதம் எங்கள் வீட்டில் இருந்ததாகவும், அதன் பின்னர், என் மருமகன், என் மகளை போலிஸ் குவாட்டர்ஸ்க்கு அழைத்துச் சென்றதாகவும் நானும் என் மனைவியும் என் மகளைப் பார்க்கச் சென்ற போது, என் மருமகன் அடிக்கடி குடித்துவிட்டு வந்து வீடு கட்ட வாங்கிய கடனுக்கு நகை போதாது என்றும் மேலும் 2லட்சம் பணம் வாங்கி வரச் சொல்லி அடித்து சித்ரவதை செய்வதாக என் மகள் கூறியதாகவும், நாங்கள் எங்கள் மருமகனிடம் ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்ட போது, எங்களை தகாத முறையில் பேசி, மேலும் 2லட்சம் கொடுங்கள் அல்லது நான் 2லட்சம் உங்களிடம் தருகிறேன் உங்களை மகளை டைவர்ஸ் செய்து கூட்டிச் செல்லுங்கள் என்று சொன்னதாகவும், அவர்களது

கடனை அடைப்பதற்காகத்தான் என் மகளைக் கட்டிக்கிட்டதாகச் சொன்னார்கள் என்றும் 29.03.2007ம் தேதி மாலை 04.15 மணியளவில், நான் என் வீட்டில் இருந்த போது, ஒரு நபர், உங்க மகளுக்கும், மருமகனுக்கும் accident ஆகிவிட்டது என்று சொன்னதைக் கேட்டு, நானும் என் மனைவியும் என் மகள் வீட்டிற்குப் போனபோது, வீடு முழுவதும் தீப் பிடித்த கோலமாக இருந்தது என்றும் என் மகளை மருத்துவமனையில் வைத்து பார்த்ததாகவும், என் மகளை, என் மருமகன் தான் தீ வைத்து கொழுத்திவிட்டதாகவும், 1,2 எதிரிகள் வரதட்சனை கொடுமை செய்ததோடு, கொன்றும்விட்டார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகளுடன் சமாதானமாகப் போய்விட்டேன் என்றும் அதனால் எதிரிகளைக் குற்ற வழக்கில் இருந்து காப்பாற்றவேண்டும் என்பதற்காக உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**

நான் ஏற்கனவே நீதித்துறை நடுவரிடம் எனது உறவினர்கள் சொல்லிக் கொடுத்தவாறு சாட்சியம் அளித்துவிட்டேன் என்றால் சரிதான். நான் என் மகளைப் பறிகொடுத்த கோவத்திலும் பதட்டத்திலும் அன்று சாட்சியம் அளித்துவிட்டேன் என்றால் சரிதான். தற்போது முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் தான் உண்மை என்றால் சரிதான். 1,2 எதிரிகளின் தூண்டுதல் என் மகளின் தற்கொலைக்கு காரணம் இல்லை என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.02.12 12:33:48 +0530

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC No. 151 / 2019** |
| **Deposition of witness for** | **:** | **PW : 3** |
| **Name** | **:** | **திருமதி. லெட்சுமி** |
| **Father's Husband's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.02.2026**

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் மதுரை மாவட்டம், 6வது பிளாக், 6வது பட்டாலியன் காவலர் குடியிருப்பில் எனது குடும்பத்தோடு குடியிருந்து வருகிறேன். அசா1 என் அம்மா. அசா2 எனது அப்பா. எனது அப்பா மிலிடரியில் வேலை செய்து ஓய்வு பெற்றுவிட்டார். எனக்கு உடன் பிறந்தவர்கள் கலைச்செல்வி என்ற தங்கையும், இரண்டு தம்பிகள். என்னை என் அம்மாவின் உடன்பிறந்த தம்பி மணிகண்டனுக்குத் திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள். எனது தங்கை கலைச்செல்வியை கோபி என்பவருக்கு 2006ம் வருஷம் செப்டம்பர் 10ம் தேதி மேட்டுரில் வைத்து திருமணம் செய்து வைத்தோம். ஆஜர் 1வது எதிரி என் தங்கையின் மாமியார் மற்றும் 2வது எதிரி என் தங்கையின் கணவரின் உடன் பிறந்த தங்கை ஆவார். எனது தங்கையின் கணவர் கோபி போலிசில்

வேலை செய்து வந்தார். என் தங்கைக்கு 45 பவுன் நகையும், மாப்பிள்ளைக்கு 6 பவுன் நகையும், ரொக்கம் 1,35,000/- மற்றும் 2லட்சம் பெறுமானம் உள்ள சீர்வரிசை பொருட்கள் கொடுத்தார்கள். எனது தங்கையின் கணவருக்கு TVS Victor வாகனம் வாங்கி கொடுத்தார்கள். திருமணத்திற்குப் பிறகு அவர்களுக்குள், சிறு சிறு சண்டைகள் ஏற்பட்டு வந்தது. என் தங்கைக்கு திருமணத்திற்கு முன்பிருந்தே, அடிக்கடி வயிற்றுவலி பிரச்சனை இருந்து வந்தது. என் பெற்றோரும் மருத்துவம் செய்து வந்தார்கள். திருமணத்திற்குப் பின்னரும் என் தங்கைக்கு அந்த வயிற்று வலி இருந்ததால், எங்கள் பெற்றோரிடம் வருவாள். அவர்கள் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வார்கள். என் தங்கை கலைச்செல்வி வயிற்றுவலி தாங்கமாட்டாமல் 29.03.2007ம்தேதி மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துக் கொண்டது. காப்பாற்றப் போன அவளது கணவர் மீதும் தீ பிடித்துவிட்டது. தகவல் கேள்விப்பட்டு நான் மதுரை பெரியாஸ்பத்திரிக்குச் சென்று பார்க்கப் போனேன். அன்றைய தினமே என் தங்கை இறந்து விட்டாள். சுமார் 15 நாட்கள் கழித்து என் தங்கை கணவரும் இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

போலிசார் விசாரணையின் போது, என் தங்கை கலைச்செல்வியும், 2வது எதிரியும் ஒரு நாள் பேசிக் கொண்டிருந்த போது, ஒரு சின்னபொண்ணு

ஒரு கடிதத்தை உமாதேவியிடம் கொடுத்துச் சென்றதாகவும், அந்த கடிதத்தைப் பார்த்து உமாதேவியை என் தங்கை கண்டித்ததாகவும், அதை என் தங்கை என்னிடம் வந்து சொன்னாள் என்றும், பிறகு விஷயம் கலைச்செல்விக்குத் தெரிந்துவிட்டதாக கருதி அவள் நாத்தனார், கலைச்செல்வியை பற்றி வேண்டுமென்றே அவங்க அம்மா மற்றும் அண்ணன் கோபியிடம் சொல்லிக் கொடுத்து மூவரும் சேர்ந்து கலைச்செல்வியிடம் வெளியே சொன்னால் உன்னை உங்க வீட்டுக்கு துரத்திவிடுவோம் என மிரட்டியதாக வந்து சொன்னாள் என்றும் பிறகு இதேயே காரணமாக வைத்து 3 மாதம் கர்ப்பமாக இருந்த என் தங்கையை அவள் புருஷன் காலால் மிதித்து அடித்து சித்ரவதை செய்துஉள்ளார் என்றும் அதனால் அவளுக்கு கர்ப்பம் கலைந்து விட்டதென எங்க அப்பா, அம்மா தான் வைத்தியம் பார்த்தாங்க என்றும் பிறகு தனிக்குடித்தனமாக அழைத்துச் சென்று நல்லபடியாகப் பார்த்துக் கொள்வன் என்று சொல்லி போன 1 1/2 மாதத்திற்கு முன்பு தான் மதுரை ரிசர்வு போலிஸ் குவார்ட்டர்ஸ்க்கு என் தங்கச்சியும் அவள் புருஷன் கோபியும் தனிக்குடித்தனம் போனாங்க என்றும், பிறகு 29.03.2007ம் தேதி மாலை 06.00 மணியளவில், நான் என் வீட்டில் இருந்த போது, அன்று மாலை சுமார் 04.00 மணி அளவில் என் தங்கை கலைச்செல்வி அவள் குடியிருந்து வந்த போலிஸ் குடியிருப்பு 3ம் நம்பர் வீட்டில் தனது உடல் மீது தீ வைத்து உடல் கருகி இறந்துபோய்விட்டதாகவும், உடனிருந்த அவள் புருஷன் கோபிக்கும் தீ காயம் ஏற்பட்டு இருவரையும் மதுரை பெரிய ஆஸ்பத்திரிக்கு தூக்கிக் கொண்டு போய்விட்டதாகவும், தகவல் கேள்விப்பட்டு வந்தேன் என்றும் என் தங்கச்சி இறப்புக்கு அவள் புருஷன் கோபியும், அவள் மாமியார் வன்னியம்மாள் மற்றும் நாத்தனார் உமாதேவி ஆகிய மூவருடைய வரதட்சணை கொடுமை தான் காரணம் என்று சொல்லியுள்ளேன் என்றால்

சரியல்ல. தற்போது எதிரிகளுடன் சமாதானமாகப் போய்விட்டேன் என்றும் அதனால் எதிரிகளைக் குற்ற வழக்கில் இருந்து காப்பாற்றவேண்டும் என்பதற்காக உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

நான் ஏற்கனவே நீதித்துறை நடுவரிடம் எனது உறவினர்கள் சொல்லிக் கொடுத்தவாறு சாட்சியம் அளித்துவிட்டேன் என்றால் சரிதான். அந்த சாட்சியம் நான் என் மகளைப் பறிகொடுத்த கோவத்திலும் பதட்டத்திலும் அன்று சாட்சியம் அளித்துவிட்டேன் என்றால் சரிதான். தற்போது முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் தான் உண்மை என்றால் சரிதான். 1,2 எதிரிகளின் தூண்டுதல் என் மகளின் தற்கொலைக்கு காரணம் இல்லை என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.02.12 12:34:08 +0530

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை